## வாழையின் விலை நிலையாக இருக்கும்

இந்தியாவில், வாழை 0.86 லட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 31.08 லட்சம் டன்கள் உற்பத்திச் செய்யப்படும் என வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய அறிக்கையானது (2017-18) தெரிவித்துள்ளது. இந்தியாவில் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கேரளா மற்றும் மஹாராஷ்டிரா ஆகியவை வாழை பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தமிழகத்தில் பொதுவாக கோயம்புத்தூர் , தேனி, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமாரி ஆகிய மாவட்டங்களில் வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது. திருச்சி, திருநெல்வேலி, கடலூர்,தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை வாழைக்கான முக்கிய சந்தைகளாகும். பண்டிகை காலங்கள் காரணமாக வரும் மாதங்களில் வாழையின் தேவைகள் அதிக அளவில் இருப்பதாலும் மற்றும் பருவ மழை வருகை வாழையின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் படி கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 7 ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தைகளில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் கடந்த 10 ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தைகளில் நிலவிய நேந்திரன் விலை ஆய்வுகளையும் மற்றும் சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது. ஆய்வின் முடிவில் நவம்பர் - டிசம்பர்,2018 மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்னை விலை கிலோவிற்கு ரூ. 17 – 18, கற்பூரவள்ளி ரூ.20-22 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.38-40 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611269